(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 68 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2009, பெப்புருவரி 17, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0099 / '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மிஹின் எயார் ஆரம்பித்ததிலிருந்து இன்றுவரை குத்தகைக்குப் பெறப்பட்ட, கொள்வனவு செய்யப்பட்ட அல்லது வாடகைக்குப் பெறப்பட்ட விமானங்களின் எண்ணிக்கையையும்,

(ii) செலுத்தப்படும் அல்லது செலுத்தப்பட்ட தொகையை மாதாந்த அடிப்படையிலும்,

(iii) நட்டம் ஏற்படாமல் செலவை ஈடுசெய்வதற்குத் தேவையான அதிகுறைந்த சரக்குகள் மற்றும் ஆட்களின் எண்ணிக்கையையும்,

(iv) விமான சேவையின் ஆரம்பத்திலிருந்து செலவை ஈடுசெய்வதற்கு கொண்டு செல்லப்பட்ட சரக்குகள் மற்றும் ஆட்களின் எண்ணிக்கையையும் மாதாந்த அடிப்படையிலும்,

(v) சரக்கு ஏற்றிச் செல்வதற்கான மொத்த இயலளவு, இற்றைவரை கொண்டு செல்லப்பட்ட மொத்த சரக்கின் கொள்ளளவு, மற்றும் ஆட்களின் எண்ணிக்கை ஆகியவற்றை மாதாந்த அடிப்படையிலும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) எரிபொருள், விமான சேவைகள், அலுவலக இடவசதி மற்றும் களஞ்சிய இடவசதி, வரிகள், விமான நிலுவைகள், வங்கிக் கடன்கள் மற்றும் ஏனைய முக்கியத்துவம் வாய்ந்த கடப்பாடுகள் ஆகியவற்றின் மொத்த நிலுவையை இன்றுள்ளவாறாக கால அளவுடனும்,

(ii) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மொத்தப் பணியாளர்களையும் எல்லா பணியாளர்களுக்கும் சம்பளத்துக்குப் புறம்பாக வழங்கப்படும் உரிமைகள் அடங்கலாக மாதமொன்றுக்குச் செலுத்தப்படும் மொத்தக் கொடுப்பனவுகளையும் மாதாந்தம் 200,000 ரூபாவிற்கு சம்பளத்தைப் பெறும் எல்லா பணியாளர்களின் விபரங்களையும்,

(iii) உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பினும்கூட விமானப் பணியாளர்கள் குழு பராமரிப்புக் காப்புறுதிக்காக (ACMI) அவர்கள் செலுத்தும் மேலதிகச் செலவையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0101 / '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சமாதானச் செயன்முறை தொடர்பாக முன்னாள் சனாதிபதி எல்ரிரிஈயுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்ட திகதியையும்,

(ii) அந்த உடன்படிக்கையின் பிரதான அம்சங்களையும்,

(iii) யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதியினையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) 2000 ஆம் ஆண்டு முதல் இன்றைய திகதிவரை சொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்ட குடிமக்கள், ஆயுதப்படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கையினை வெவ்வேறாகவும்,

(ii) 2008 ஆம் ஆண்டு சனவரி 3ஆம் திகதி யுத்த நிறுத்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டதன் பின்னர் கிடைத்த நன்மைகளை மிகச்சரியான சான்று களுடனும்,

(iii) 2000 ஆம் ஆண்டிலிருந்து இன்றைய திகதிவரை இராணுவத்திற்கும் பொலிசிற்கும் செலவழிக்கப்பட்ட செலவினை வருடாந்த அடிப்படையிலும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0115 / ' 08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அமைக்கப்பட்ட திகதி எது என்பதையும்,

(ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உறுப்பினர்கள் யார் என்பதையும், அவர்களை நியமிப்பதில் பயன்படுத்தப்படும் வழிமுறையையும்,

(iii) பல்கலைக்கழகங்களுக்கான பாடத்திட்டத்தை தயாரித்தவர் யார் என்பதையும், அதற்குப் பயன்படுத்தப்பட்ட அடிப்படையையும்,

(iv) மாணவர்கள் பட்டப்படிப்பை தொடர்வதற்காக பாடங்கள் எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளன என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 05 வருடங்களில் பல்கலைக்கழக பாடத்திட்டத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பட்டங்களின் பெயர்கள் எவை என்பதையும்,

(ii) கடந்த 05 வருடங்களில், பல்கலைக்கழக அடிப்படையில் ஒவ்வொரு பட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை என்ன என்பதையும்,

(iii) அப்பட்டங்களுக்கு மாணவர்களை ஒதுக்கப் பயன்படுத்தப்படும் அளவுகோல் என்ன என்பதையும்,

(iv) நாட்டின் தேவையைப் பொறுத்து கற்கை நெறிகளை ஒதுக்கும் ஏதாவது அரச நிறுவனத்திற்கும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கும் இடையில் தொடர்பு உள்ளதா என்பதையும்,

(v) அவ்வாறில்லையாயின், பயன்படுத்தப்படும் அடிப்படை என்ன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0410 / ' 08

4.

கௌரவ அச்சல ஜாகொடகே,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபையின் வலவை – எம்பிலிபிட்டிய எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் இலங்கை மகாவலி அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்டபோது 1982.01.01 ஆம் திகதியன்று ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமாயிருந்த அனைத்துச் சொத்துக்களும் யாவை,

(ii) இவற்றில் பொறுப்பேற்கப்பட்டதும், பொறுப்பேற்கப்படாததுமான அசையாச் சொத்துக்கள் மற்றும் வாகனங்கள் உள்ளடங்கிய சொத்துக்கள் யாவை,

(iii) இவற்றில் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபையின் வீடுகள் /காணிகளின் எண்ணிக்கை யாது,

(iv) ஒப்படைக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் அவை ஒப்படைக்கப்பட்ட அடிப்படை யாது,

(v) ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களில் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபையின் வீடுகள்/காணிகளின் எண்ணிக்கை யாது,

(vi) ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபையிலிருந்த எத்தனை ஊழியர் களுக்கு இவ்வாறு ஒப்படைக்கப்பட்டது,

(vii) ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபையில் தற்போது எஞ்சியுள்ள வீடுகள் / காணிகளின் எண்ணிக்கை யாது,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 1982.01.01 ஆம் திகதியிலிருந்து 2007.12.31 ஆம் திகதி வரையிலான காலத்தினுள் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபைக்கு சொந்தமாயிருந்த [இன்றைய இலங்கை மகாவலி அதிகார சபை] (வலவை) வீடுகள் / காணிகள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0604 / '08

5.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தயட்ட கிருல 2008 கண்காட்சியில் மாகாண சபைக்குரிய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் கலந்து கொண்டனவா என்பதையும்,

(ii) மாகாண சபைகள் கலந்து கொண்டால் ஒவ்வொரு மாகாண சபையும் வெவ்வேறாக எத்தகைய கடமைகளில் ஈடுபட்டன என்பதையும்,

(iii) அந்தந்த மாகாண சபைகளினால் கண்காட்சி கூடங்கள் அல்லது கண்காட்சி உபகரணங்கள் வழங்கப்பட்டனவா என்பதையும்,

(iv) அவ்வாறெனின், ஒவ்வொரு மாகாண சபையும் வெவ்வேறாக எவ்வாறான கண்காட்சிகளை ஏற்பாடு செய்திருந்தன என்பதையும்,

(v) ஒவ்வொரு மாகாண சபையின் அமைச்சுக்களினால் அல்லது நிறுவனங்களினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த காட்சிக்கூடங்கள் மற்றும் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(vi) அத்தொகை செலவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் செலவுத் தலைப்புக்கள் யாவை என்பதையும்,

(vii) அனைத்து மாகாண சபைகளினாலும் அந்த கண்காட்சிக்காக செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல்,ஏன்?

0750 / '08

6.

கௌரவ லக்ஷ்மன் நிபுனஆரச்சி,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) பாதுக்கை, மீப்பே, ஹேவாகம்வத்தை தியவரக் கிராமக் கருத்திட்டத்திற்காக காணி வழங்கும் பொருட்டு 90 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதையும்,

(ii) பாதுக்கை பிரதேச செயலாளரால் 2003.08.22 ஆம் திகதி காணி பெறுநர்களது கூட்டமொன்று கூட்டப்பட்டது என்பதையும்,

(iii) மீண்டும் 2005.06.18 ஆம் திகதி நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளது தலைமையில் பாதுக்கை பிரதேச செயலகத்தில் காணி பெறுநர்களின் கூட்டமொன்று கூட்டப்பட்டது என்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) (i) வீடமைப்பு நோக்கத்திற்காக காணித் துண்டொன்றை ஒப்படைத்தல் எனக் குறிப்பிட்டு, காணித் துண்டின் இலக்கம் அல்லது காணியின் பரப்பளவைக் குறிப்பிடாது காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அளிப்புப் பத்திரம் என்றவகையில், அரச இலச்சினையுடன் உரிமைப் பத்திரமொன்று காணி பெறுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) 2005.10.20 ஆம் திகதி பாதுக்கை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற தியவரக் கிராமத்தின் அங்குரார்ப்பண விழாவின் போது வீடொன்றை அமைத்துக்கொள்ளும் பொருட்டு குறித்த அமைச்சினால் 50,000 ரூபா வழங்கப்படுவதாக காணி பெறுநர்களுக்கு கடிதமொன்று வழங்கப்பட்டது என்பதையும்,

(iii) காணி பெறுநர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 2000 ஆம் ஆண்டிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு, 2001.08.09 ஆம் திகதி காணிக் கச்சேரி பாதுக்கை சனசமூக நிலையத்தில் நடைபெற்றதென்பதையும்,

(iv) தெரிவு செய்யப்பட்ட காணி பெறுநர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் நில அளவைக் கட்டணமாக 1,500 ரூபாவும், காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் விண்ணப்பப் படிவக் கட்டணமாக 100 ரூபாவும், காணியைத் துப்புரவு செய்வதற்காக 10,000 ரூபாவும் இடைக்கிடை அறவிடப்பட்டுள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) மேற்குறிப்பிட்டவர்களுக்கு இதுவரை காணித்துண்டுகள் கிடைக்காமைக்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0888 / '08

7.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆராச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மீகொட, கொடகம, பெல்பொலவத்த, சமாதி மாவத்தை மற்றும் கிரிமெட்ட பாதை என்ற இரு இடங்களில் நிகழ்ந்துள்ள விபத்துகளின் காரணமாக புகையிரத பாதுகாப்புக் கடவை அல்லது மின்சார சமிக்ஞை விளக்கு ஒன்று தேவை என்பதை ஹோமாகம பிரதேச சபையும் பிரதேசவாசிகளும் எழுத்து மூலம் அறிவித்துள்ளனரென்பதையும்,

(ii) அதற்குப் பதிலளிக்குமுகமாக 2008.04.30ஆம் திகதியிட்ட கடிதமொன்று அவருக்கு ஒரு பிரதியுடன் புகையிரத பொதுமுகாமையாளரால் ஹோமாகம பிரதேச சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அக்கடிதத்தின் 2வது பந்தியில், புகையிரத பாதைக்குக் குறுக்காக உள்ள பாதையில் பயணம் செய்கின்ற பயணிகளுக்குப் பாதுகாப்பு வழங்க புகையிரத திணைக்களத்திற்கு எவ்வித தேவையும் இல்லை எனவும்,

(ii) 3வது பந்தியில், புகையிரத பாதைக்குக் குறுக்காக உள்ள பாதையில் பயணம் செய்கின்ற வாகன ஓட்டுனர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கான பொறுப்பு புகையிரத திணைக்களத்திற்கு இல்லை எனவும்,

(iii) 4ஆவது பந்தியில், புகையிரத திணைக்களம் அதற்காகக் கொள்கைத் தீர்மானமொன்றை எடுத்துள்ளதெனவும்

குறிப்பிடப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) (i) புகையிரத பொதுமுகாமையாளரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறுக்காக உள்ள பாதையில் பயணம் செய்கின்ற பயணிகளினதும் வாகனங்களினதும் பாதுகாப்பை அலட்சியப்படுத்துவதற்குக் கொள்கைத் தீர்மானம் எடுக்கப்பட்டது எப்பொழுது,

(ii) தீர்மானம் எடுப்பதில் கலந்து கொண்டவர்கள் யார்,

(iii) அத்தீர்மானத்தைப் பொதுமக்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0894 / '08

8.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008 ஆம் ஆண்டில் வட மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைகளுக்காக நடைபெற்ற தேர்தல்களுக்கு அரசினால் செலவிடப்பட்ட மொத்த தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) பல்வேறு விடயங்களின் கீழ் உள்ள அந்தப் பணம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இந்த சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0946 / ' 08

9.

கௌரவ எட்வட் குணசேகர,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2006 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் நடைபெற்ற அவசர காலச்சட்ட விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 163/6) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்த கால எல்லையில் ஒவ்வொரு திகதியிலும் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப்படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0989 / '08

10.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) வெளிநாட்டு மீன்பிடிக் கலங்கள் மூலமாக இந்நாட்டுக்கு மீன் இறக்கப்படுகின்ற தென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2008 சனவரியில் இருந்து ஒற்றோபர் மாதம் வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு மீன்பிடிக் கலங்களினால் முகத்துவாரம் மீன்பிடித் துறை முகத்திலும் காலி வணிகத் துறைமுகத்திலும் இறக்கப்பட்ட மீனின் அளவு தனித்தனியாக எவ்வளவு,

(ii) உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் இவ்வாறு இறக்கப்பட்ட மீன்களின் தொகையிலிருந்து இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கவேண்டிய அளவு யாது,

(iii) 2008 சனவரி மாதத்தில் இருந்து இற்றைவரை காலி வணிகத் துறைமுகத்திலும் முகத்துவாரம் மீன்பிடித் துறைமுகத்திலும் இறக்கப்பட்ட மீன்களுள் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட மீனின் அளவு யாது,

(iv) மேற்படி காலப்பகுதியில் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் அடைந்த நிதி ரீதியான இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1010 / ' 0 8

11.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) தொழிற்பாட்டு உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொள்ளாததன் காரணமாக கடற்றொழிலாளர்களுக்கெதிராக கடற்றொழில் திணைக்களம் நீதிமன்ற நடவடிக்கை எடுத்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இதுவரை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மீனவர்களின் எண்ணிக்கை மாவட்ட ரீதியில் தனித்தனியாக எத்தனை என்பதையும்,

(ii) தொழிற்பாட்டு உத்தரவுப்பத்திரங்கள் எத்தகைய படகுகளுக்காகப் பெறப்பட வேண்டும் என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) தொழிற்பாட்டு உத்தரவுப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு காப்புறுதிச் சான்றிதழ் பெறப்பட வேண்டியது கட்டாயமான நிபந்தனையா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1002 / ' 0 8

12.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) துறைமுக அதிகார சபையில் தொழில் வழங்கும் போது இலங்கை துறைமுக அதிகார சபையின் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப் படுவது தற்போதும் நடைமுறையில் இருக்கின்றதா என்பதையும்,

(ii) அது நடைமுறையில் இல்லாவிடில், அதற்கான காரணங்களையும்,

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இலங்கை துறைமுக அதிகாரசபையில் எழுதுநராக பணியாற்றி 2004 இல் இளைப்பாறிய கடவத்த, இஹல பியன்வில, 370/2-1 ஆம் இலக்க முகவரியில் வதியும் திரு. விஜேசிங்கவின் பிள்ளைகளுக்கு அவர்களின் தகைமைகளுக்கு ஏற்ப தொழில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(இ) இன்றேல், ஏன்?

1005/ ' 08

13.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்ட சட்டவிரோதமான பொருட்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவு மற்றும் பரிசில்களின் மொத்த பெறுமதி எவ்வளவென் பதையும்,

(ii) மேற்படி கொடுப்பனவுகளையும் பரிசில்களையும் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்,

(iii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவுகளும் பரிசில்களும் வழங்கப்படுவதற்கு காரணமாக அமைந்த விடயங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iv) இந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல்,ஏன்?

1008 / ' 0 8

14.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— தொழில் உறவுகள், மனித வலு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஊழியர்களது சம்பளத்திலிருந்து ஊழியர் சேமலாப நிதியத்திற்காக பணம் அறவிடப்படுகின்ற தென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2007 இரண்டாம் அரையாண்டின் பொருட்டு ஊழியர் சேமலாப நிதியத்திற் கான கணக்குக் கூற்றுக்கமைய 2007 யூலை மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரை பணம் வரவு வைக்கப்படவில்லை என்பதையும்,

(ii) 2008 மாச்சு மாதத்திலிருந்து ஓகத்து மாதம் வரையிலான 6 மாதங்களுக் குரிய பணம் வரவு வைக்கப்படவில்லையென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) தமது சம்பளத்தில் 10% மும் சில நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான பங்களிப்புத் தொகை மற்றும் கூட்டுத்தாபனத்திற்கான பங்களிப்புத் தொகையில் 28% மும் அறவிடப்பட்டு நிதிப் பிரிவுக்கு அனுப்பப்படடிருந்தாலும் உரிய கணக்குகளில் பணம் வரவு வைக்கப்படாதது தொடர்பாகவும் உரிய வட்டி கிடைக்காமை தொடர்பாகவும் ஊழியர்கள், நிருவாக மற்றும் நிதி பிரிவு தொடர்பாக அதிருப்த்தி கொண்டுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) இதுவரை ஊழியர் சேமலாப நிதியத்தில் வரவு வைக்கப்படாதுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) இப் பணத்தொகையை துரிதமாக வரவு வைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(iii) ஆமெனில், அது எப்போதிருந்தென்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

1064/ '08

15.

கௌரவ ஜினதாஸ கித்துலகொட,— மீள்குடியமர்த்துகை, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) பிரிவினைவாதப் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கையையும்,

(ii) சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய இன அடிப்படையில் இக்குடும்பங்களின் எண்ணிக்கையை மாவட்ட ரீதியாகவும்,

(iii) இவர்கள் தங்கியிருக்கும் தற்காலிக முகாம்களின் எண்ணிக்கையும் ஒவ்வொரு முகாமிலும் உள்ளவர்களின் எண்ணிக்கையையும்

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) தற்போது தற்காலிக முகாம்களில் உள்ள இடம்பெயர்ந்தவர்களை மீண்டும் அவர்களின் பிரதேசங்களில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும் அது எக்காலப்பகுதியில் முடிவடையும் என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சர்,— சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவ கணக்காளர் நிறுவகம்,— சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவ கணக்காளர் நிறுவகத்தையும் அதன் அலுவல்களை முகாமை செய்வதற்குப் பொறுப்பாக இருக்க வேண்டிய நிறுவனத்தின் பேரவையொன்றையும் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் நிறுவகத்தின் உறுப்பினர்களை பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கும் நிறுவகத்தின் உறுப்பினர்களால் உயர்தொழில்சார் நியமங்களையும் ஒழுக்காற்றையும் பேணுவதற்கும் ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2009.1.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான ) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதிகள் தீர்வைகள் சம்பந்தமான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2008, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதிய 1579/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி.)

*2.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத் துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 6 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 06

2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பண்டகசாலை முற்பணக்கணக்கு" — இலங்கை புகையிரதத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை ரூபா 1,100,000,000 இலிருந்து ரூபா 1,500,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக் கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 550,000,000 வரை.

(இக்கட்டளை 2008.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2009.01.12.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரும்,— இலங்கை முதலீட்டுச் சபையின் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1) ,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2006, மே மாதம் 31 ஆந் திகதிய 1447/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*4.

மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரும்,— இலங்கை முதலீட்டுச் சபையின் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2) ,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2006, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய 1469/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*5.

மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரும்,— இலங்கை முதலீட்டுச் சபையின் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3) ,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2007, செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதிய 1513/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*6.

மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரும்,— இலங்கை முதலீட்டுச் சபையின் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4) ,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2008, மே மாதம் 05 ஆந் திகதிய 1548/ 7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*7.

விலங்குகள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*12.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*14.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*15.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*16.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*18.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*19.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றத்தி னால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*24.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— ``(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*25.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

26.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

ஸ்ரீ பாத கல்பவருக்ஷ் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

விலங்குகளுக்குக் கொடுமையிழைத்தலைத் தடுப்பதற்கான இலங்கைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

இலங்கை கட்டமைப்புசார் எந்திரவியலாளர் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

31.

பாஹியங்கல பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

32.

கொலன்னாவ பௌத்த இளைஞர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

33.

இலவச பாலர் பாடசாலை அத்துடன் நலன்புரித்தொகுதி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

34.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

35.

றங்கா கலை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொளண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0287 / ' 08

1.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுகாதாரப் பிரதி அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0289 / ' 08

2.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தபால் பிரதி அமைச்சருக்கு உத்தியோக பூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0947 / '08

3.

கௌரவ எட்வட் குணசேகர,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2006 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதத்தில் நடைபெற்ற அவசர காலச்சட்ட விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 163/9) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்த கால எல்லையில் ஒவ்வொரு திகதியிலும் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப்படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படுமாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0948 / ' 08

4.

கௌரவ எட்வட் குணசேகர,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் நடைபெற்ற அவசர காலச்சட்ட விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 163/13) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்த கால எல்லையில் ஒவ்வொரு திகதியிலும் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப்படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படுமாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0949 / '08

5.

கௌரவ எட்வட் குணசேகர,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2006 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதத்தில் நடைபெற்ற அவசர காலச்சட்ட விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 164/1) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்த கால எல்லையில் ஒவ்வொரு திகதியிலும் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப்படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0950 / ' 08

6.

கௌரவ எட்வட் குணசேகர,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2006 ஆம் ஆண்டு மே மாதத்தில் நடைபெற்ற அவசர காலச்சட்ட விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 164/9) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்த கால எல்லையில் ஒவ்வொரு திகதியிலும் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப்படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0951 / ' 08

7.

கௌரவ எட்வட் குணசேகர,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2006 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் நடைபெற்ற அவசர காலச்சட்ட விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 164/18) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்த கால எல்லையில் ஒவ்வொரு திகதியிலும் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படை யினர், விமானப்படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1000 / ' 0 8

8.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 செப்தெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் இத்தாலியில் தொழில்வாய்ப்புக்கள் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்கூறிய ஒவ்வொரு ஆண்டிலும் தொழில் வாய்ப்புக்கள் பெற்றவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றை பிரதேச செயலாளர்கள் பிரிவு அடிப்படையில் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறியவர்களை சேர்த்துக் கொள்வதற்கு பகிரங்க அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டனவா என்பதையும்,

(ii) அவ்வாறெனின் குறிப்பிட்ட திகதி மற்றும் பத்திரிகைகள் எவை என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1001 / ' 0 8

9.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 செப்தெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் கொரியாவில் தொழில்வாய்ப்புக்கள் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்கூறிய ஒவ்வொரு ஆண்டிலும் தொழில் வாய்ப்புக்கள் பெற்றவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றை பிரதேச செயலாளர்கள் பிரிவு அடிப்படையில் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறியவர்களை சேர்த்துக் கொள்வதற்கு பகிரங்க அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டனவா என்பதையும்,

(ii) அவ்வாறெனின் குறிப்பிட்ட திகதி மற்றும் பத்திரிகைகள் எவை என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?